**மாவட்ட அமர்வு நீதிமன்றம், நாகப்பட்டினம்**

முன்னிலை: திருமதி. ஜி.எம். வசந்தி, எம்.எல்.,

முழுக் கூடுதல் பொறுப்பு மாவட்ட அமர்வு நீதிபதி, நாகப்பட்டினம்

(மகளிர் விரைவு அமர்வு நீதிபதி)

**2026ம் ஆண்டு ஜூன் மாதம் 04ம் நாள்** - வியாழக்**கிழமை**

திருவள்ளுவராண்டு 2057 பராபவ வருடம் வைகாசி 21-ம் நாள்

**கு.ப.ம.எண். 410/2026**

சுழியன் (எ) முனியப்பன், வயது 28/26 , த/பெ சுப்பிரமணியன் ..... மனுதாரர்/ எதிரி

-எதிர்-

காவல் ஆய்வாளர், கீழையூர் காவல்நிலையம்,

குற்ற எண் 118/2026 ......எதிர்மனுதாரர்

இம்மனு என் முன்பாக இன்று (04.06.2026) விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பு வழக்குரைஞர் திருமதி. கே. ஏகாம்பரி மற்றும் எதிர்மனுதாரர்தரப்பு அரசு வழக்குரைஞர் திரு. ஆர். செல்வராஜ் ஆகியோர் ஆஜராகி எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டும், ஆவணங்களை பரிசீலித்தும் இந்நீதிமன்றம் வழங்கும்.....

**// உத்தரவு//**

இம்மனு எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள குற்ற எண். 118/2026-ல் பிரிவுகள் 296(பி), 308(4), 351(3) BNSன் கீழான குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டுள்ள மனுதாரர்/குற்றம் சாட்டப்பட்டவர்களால் பிணை கோரி பிரிவு 483 BNSSன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுதாரர்தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் மனுதாரர் நிரபராதி என்றும், மனுதாரர் மீது பொய் வழக்கு புனையப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் கடந்த 13.05.2026 அன்று கைது செய்யப்பட்டு 23 நாட்களாக நீதிமன்றக்காவலில் உள்ளார் என்றும், இம்மனு முதல் பிணை மனு ஆகும். எனவே, மனுதாரருக்கு ஜாமீன் வழங்கி உத்தரவிடவேண்டும் என்று கோரினார்.

3. அரசுத்தரப்பு கற்றறிந்த அரசு வழக்கறிஞர் தனது வாதத்தில் புகார்தாரர் கடந்த 12.05.2026ம் தேதி வேலை முடித்துவிட்டு வீட்டுக்கு வரும்போது இவ்வழக்கின் எதிரி கத்தியை காட்டி கையிலிருக்கும் பணத்தை கேட்டு மிரட்டியும் மற்றொரு எதிரி அசிங்கமாக திட்டியும், சட்டை பாக்கெட்டில் வைத்திருந்த 200 ரூபாயை எடுத்துக் கொண்டு கொலை மிரட்டல் விடுத்தார் என்றும், இவ்வழக்கின் எதிரி மீது போக்கிரி சரித்திர பதிவேட்டு

குற்றவாளி என்றும், எதிரிக்கு நாகப்பட்டினம் வருவாய் கோட்டாட்சியர் அவர்களிடமிருந்து ஓராண்டுக்கு நன்னடத்தை பிணை பத்திரம் பெற்று கண்காணிக்கப்பட்டு வந்தவர் இக்குற்ற சம்பவத்தில் ஈடுபட்டுள்ளார் என்றும், இவ்வழக்கு புலன் விசாரணை நிலுவையில் உள்ளதாகவும், மனுதாரருக்கு ஜாமீன் வழங்க ஆட்சேபனை தெரிவித்தார்.

4. இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர் மீது பிரிவுகள் 296(பி), 308(4), 351(3) BNSன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. புகார்தாரர் கடந்த 12.05.2026ம் தேதி வேலை முடித்துவிட்டு வீட்டுக்கு வரும்போது இவ்வழக்கின் எதிரி கத்தியை காட்டி கையிலிருக்கும் பணத்தை கேட்டு மிரட்டியும் மற்றொரு எதிரி அசிங்கமாக திட்டியும், சட்டை பாக்கெட்டில் வைத்திருந்த 200 ரூபாயை எடுத்துக் கொண்டு கொலை மிரட்டல் விடுத்துள்ளார். இவ்வழக்கின் எதிரி மீது போக்கிரி சரித்திர பதிவேட்டு குற்றவாளி. எதிரிக்கு நாகப்பட்டினம் வருவாய் கோட்டாட்சியர் அவர்களிடமிருந்து ஓராண்டுக்கு நன்னடத்தை பிணை பத்திரம் பெற்று கண்காணிக்கப்பட்டு வந்தவர் இக்குற்ற சம்பவத்தில் ஈடுபட்டுள்ளார். மேற்படி வழக்கில் 13.05.2026 அன்று மனுதாரர் கைது செய்யப்பட்டு நீதிமன்றக்காவலில் உள்ளார். மனுதாரருக்கு ஜாமீன் வழங்கினால், அவர் சாட்சிகளை மிரட்டவோ அல்லது திசைத்திருப்பவோ அல்லது மீண்டும் இதுபோன்ற குற்றச்செயலில் ஈடுபடவும் வாய்ப்புள்ளது. வழக்கின் புலன் விசாரணை இன்னும் முடிவடையாமல் நிலுவையில் உள்ளது. எனவே குற்றத்தின் சூழ்நிலையை கருத்தில்கொண்டு, இந்த மனுவை நீதிமன்றம் **தள்ளுபடி** செய்து உத்தரவிடுகிறது.

முடிவில் இம்மனு **தள்ளுபடி** செய்யப்படுகிறது.

இன்று (04.06.2026) திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ஒப்பம்/- ஜி.எம். வசந்தி,
மாவட்ட அமர்வு நீதிபதி (முகூபொ)
(மகளிர் விரைவு அமர்வு நீதிபதி)
நாகப்பட்டினம்.

நகல்

1. மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறைநடுவர் , கீழ்வேளூர்
2. காவல் ஆய்வாளர், கீழையூர் காவல்நிலையம்
3. திருமதி. கே. ஏகாம்பரி, வழக்கறிஞர், நாகப்பட்டினம்.